06.02.2025

O.S.No.271/2016

வா.சா.1.திரு.சுப்பிரமணியம் த.பெ.ராமநாதன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு** விசாரணை

எங்களது சொத்திற்கு தென்புறம் தான் பிரதிவாதி சொத்து உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் அவர்களது சொத்தை கிரையம் பெற்றது நாங்கள் கிரையம் பெறுவதற்கு 20 ஆண்டுகளுக்கு முன்பு என்றால் வா.சா.ஆ 8 ஆவணத்தை பார்த்து பிரதிவாதிகள் 1993 ஆம் ஆண்டு கிரையம் பெற்றதாக சாட்சி கூறுகிறார். பிரதிவாதிகள் கிரையம் பெற்று கட்டிடம் எழுப்பி தொழில் நடத்தி கொண்டிருந்தபோது தான் அவர்களுக்கு வடபுறம் இருந்த சொத்தை நாங்கள் கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான். பிரதிவாதிகள் அந்த சொத்தில் பெருங்காயம் கம்பெனி வைத்துள்ளார்கள் என்றால் அவர்கள் கம்பெனி வைத்துள்ளார்கள் என்ன கம்பெனி என்று எனக்கு தெரியாது. 1998 ல் முதலில் 1, 2 வாதிகள் பெயரில் வா.சா.ஆ 1, வா.சா.ஆ 3 ஆவணங்களில் கண்டுள்ள சொத்தை கிரையம் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது ஒவ்வொன்றும் தலா 14 செண்ட் என்றால் சரிதான்.

2. 1, 2 வாதிகள் சொத்தை கிரையம் வாங்கியபோது அந்த சொத்திற்கு தண்ணீர் வருவதற்கு நீர்பாசனம் வாய்கால் எதுவும் கிடையாது. அப்போது விவசாயமும் இல்லை. 1, 2 வாதிகள் வாங்கிய சொத்திற்கு நான்குபுறமும் தனி நபர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 1 மற்றும் வா.சா.ஆ 3 ஆவணப்படி 1, 2 வாதிகள் வாங்கிய சொத்திற்கு போய் வருவதற்கு பாதை இல்லை என்றால் சரியல்ல. வடபுறம் வண்டியூர் கண்மாய்க்கு போய்கிற வாய்கால்கரை இருந்தது. அதன் வழியாக அந்த சொத்திற்கு செல்ல முடியும். அவ்வாறு வாய்கால்கரை வடபுறம் இருப்பதாக வா.சா.ஆ 1, வா.சா.ஆ 3 ஆவணத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் எனது பெயரில் எந்த ஆண்டு கிரையம் வாங்கினேன் என்றால் 1998 என்று நினைக்கிறேன். ஆவணத்தை பார்த்தால் தான் சொல்லமுடியும்.

3. நான் கிரையம் வாங்கினது 2007 ஆம் ஆண்டு என்றால் வா.சா.ஆ 5 ஆவணத்தை பார்த்து 2007 ல் தான் கிரையம் வாங்கியதாக சாட்சி கூறுகிறார். வா.சா.ஆ 5 ஆவணப்படி அந்த சொத்தின் நான்குமால் படி அந்த சொத்திற்கு பாதை கிடையாது என்றால் சரிதான். எந்த ஆண்டு தேசிய நெடுஞ்சாலைக்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரியாக வருடம் ஞாபகமில்லை. எனது சொத்தில் இருந்து 100 மீட்டருக்கு முன்பே தேசிய நெடுஞ்சாலை முடிவடைகிறது என்றால் சரியல்ல. எனது இடம் வரை தேசிய நெடுஞ்சாலை உள்ளது. எனது பிராதில் சொத்திற்கு நான்குமால் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துகளாக காட்டப்பட்டுள்ள இடத்திற்கும் தேசிய நெடுஞ்சாலைக்கும் இடையே உள்ள 100 மீட்டர் தூரத்தில் எவ்வத நிலத்தையும் தேசிய நெடுஞ்சாலைக்காக ஆர்ஜிதம் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது.

4. மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் இருந்து கப்பலூர் செல்லும் சுற்று சாலை தாவா சொத்தை ஒட்டி உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு முந்தின இடம் வரை தேசிய நெடுஞ்சாலை வருகிறது. தாவா சொத்திற்கும் தேசிய நெடுஞ்சாலை இடையே ஒரு சொத்து உள்ளது என்றால் சரிதான். அந்த சாலை மதுரை மாநகராட்சி சாலை என்றால் எனக்கு தெரியாது. தேசிய நெடுஞ்சாலை முடிந்தும் அதற்கு அப்பால் 100 மீட்டர் விட்டு அதற்கு அப்பால் உள்ள இடத்தை தேசிய நெடுஞ்சாலைக்காக ஆர்ஜிதம் செய்ய ஏற்பாடு செய்தது நான் தான் என்றால் இல்லை.

**(குறுக்கு விசாரணை** தொடர்ச்சிக்காக **வேறு ஒரு தேதியில் ஒத்தி வைக்கப்படுகிறது)**